**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இராமேஸ்வரம்.**

**முன்னிலை: திரு.S.B. சுஜித், B.A. B.L.,(Hons)**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்**

**2026-ம் ஆண்டு ஜூன் திங்கள் 22-ம் நாள் திங்கட்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 128/2022**
**(CNR.NO: TNRM05-004201-2022)**

| | | | |
|---|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | : | அரசுக்காக, சார்பு காவல் ஆய்வாளர், இராமேஸ்வரம் நகர் காவல் நிலையம், குற்ற எண். 369/2020 |

**எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | சுரேஷ் |
| 3. | த/பெ | : | சேது ராஜன் |
| 4. | தொழில் | : | -- |
| 5. | முகவரி | : | மாங்காடு, இராமேஸ்வரம். |
| 6. | வயது | : | 43/2020 |

| | | | |
|---|---|---|---|
| 7. | சம்பவ நாள் | : | 27.10.2020-ம் தேதி 08.15 மணி |
| 8. | புகார் தேதி | : | 27.10.2020-ம் தேதி 14.00 மணி |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | 02.11.2020 |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 02.11.2020 ம் தேதியன்று நிலையப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். |
| 11. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 05.09.2022 |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | : | 10.11.2022 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | : | 18.06.2026 |
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | எதிரி மீது பிரிவுகள் 294(b), 323, 324, 506(2), இதச மற்றும் 4 of TNPHW Act படி |

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.22 16:34:00 +0530

| | | | |
|---|---|---|---|
| 15. | வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | எதிரி மீது பிரிவுகள் 294(b), 323, 324, 506(2), இதச மற்றும் 4 of TNPHW Act படி |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் | : | சாட்சிகள் உரிய காலத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை. |
| 17. | அரசு தரப்பு சாட்சிகள் | : | முதல் விசாரணை / எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை |

| முதல் விசாரணை | | எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை | |
|---|---|---|---|
| அ.சா.1 | – 07.08.2024 | அ.சா.1 | –07.08.2024 |
| அ.சா.2 | – 12.05.2025 | அ.சா.2 | –இல்லை |
| அ.சா.3 | – 12.05.2025 | அ.சா.3 | –இல்லை |
| அ.சா.4 | – 22.05.2026 | அ.சா.4 | 22.05.2026 |

| | | | |
|---|---|---|---|
| 18. | எதிரியிடம் பிரிவு 313(1)(b) Cr.P.C படி விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 05.06.2026. |
| 19. | எதிரி தரப்பு சாட்சிகள் | : | இல்லை |
| 20. | எதிரி/குற்றமுறையீடுனர் தரப்பில் தாக்கல் செய்யப்பட் 311 Cr.P.C/348 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 21. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட் 320 Cr.P.C/359 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 22. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 70(2) Crpc/ 72(2) BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | எதிரி தரப்பில் 70(2) Crpc பிரிவின் படியான மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற Crl.M.P.No.5863/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 10.11.2022ம் தேதி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. |
| 23. | அரசு தரப்பு வழக்கறிஞர் | : | திரு.மணிசங்கர் |
| 24. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | : | திரு.K.K. மயில்சாமி |
| 25. | எதிரியின் கூற்று | : | எதிரி தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |

SUJITH
Digitally signed by SUJITH
Date: 2026.06.22 16:34:08 +0530

| | | | |
|---|---|---|---|
| 26. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | : | 22.06.2026 |
| 27. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 22.06.2026 |
| 28. | நீதிபதியின் முடிவு | : | **முடிவாக எதிரி பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) இதச மற்றும் 4 of TNPHW Act இதச படி குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 248(1) Crpc ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. குற்றம்சாட்டப்பட்டவர் எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் இரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.** |

இவ்வழக்கு 05.09.2022–ம் தேதியன்று குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 (இனி கீழ் வரும் இடங்களில் **குவிமுச** என்று குறிப்பிடப்படும்) பிரிவு 190(1)ன் படி இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தின் முன்பு 18.06.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, குற்றமுறையிடுனர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.K.மயில்சாமி அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று, இரு தரப்பும் கேட்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இன்று வரை இந்த நீதிமன்றத்தில் பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## <u>தீர்ப்புரை</u>

**1.<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u>:**

கடந்த 27.10.2020 ம் தேதி காலை 08.15 மணிக்கு காயம்பட்ட புகார்தாரர் சுடுகாட்டன்பட்டியில் உள்ள தங்கை வீட்டு முன்பாக பொது இடத்தில் நின்று

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.22 16:34:14 +0530

கொண்டிருந்தபோது அங்கு வந்த எதிரி புகார்தாரரைப்பார்த்து ஏண்டி தேவுடியா புண்டை மகளே நான் சம்பாரித்து பணத்தை எல்லாம் அழித்துவிட்டு இங்கு வந்து உட்கார்ந்துவிட்டே என அசிங்கமாக பேசி மறைத்துவைத்திருந்த இரும்பு கம்பியை எடுத்து புகார்தாரரின் வாயில் அடித்து சிறுகாயம் ஏற்படுத்தியும் பின்பு புகார்தாரரை கீழே தள்ளிவிட்டு புகார்தாரரின் வலது காலை கையால் திருகி முருக்கி சிறுகாயம் ஏற்படுத்தியும் பின்பு புகார்தாரரை அடித்த இரும்பு கம்பியை காட்டி இன்று நீ தப்பித்துக்கொண்டாய் உன் சாவு என் கையில் தாண்டி என கொலை மிரட்டல் விடுத்து குற்றம்புரிந்ததாக குற்றம்சாட்டப்பட்டவரான எதிரி மீது பிரிவுகள்.294(b), 323, 324 இந்திய தண்டனை சட்டம், 1860 (இனி கீழ் வரும் இடங்களில் '**இதச**' என்று குறிப்பிடப்படும்) படி மற்றும் 4 தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடைச்சட்டம் (இனி கீழ் வரும் இடங்களில் 'TNPHW' என்று குறிப்பிடப்படும்) படி இராமேஸ்வரம் நகர் காவல் நிலைய காவல் சார்பு ஆய்வாளரால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. குற்ற இறுதி அறிக்கை இந்த நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு குவிமுச பிரிவு 204 கீழ் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அழைப்பாணை அனுப்பியதன் பெயரில் குற்றம் சாட்டப்பட்டவர் இந்த நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 207 குவிமுச படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம் சாட்டப்பட்டவருக்கு போதிய சந்தர்ப்பமும், அவகாசமும் வழங்கிய பின்பு குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய முகாந்திரம் இருப்பதாக தெரியவந்ததால் இந்த நீதிமன்றம் பிரிவு 240(1) குவிமுச படி குற்றம் சாட்டப்பட்டவரான எதிரி மீது பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) இதச மற்றும் 4 of TNPHW Act படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவியபோது குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்தை மறுத்ததால், அரசு தரப்பு சாட்சிகளை ஆஜர்படுத்த பிரிவு 242(1) குவிமுச கீழ் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

SUJITH Digitally signed by SUJITH
Date: 2026.06.22 16:34:23 +0530

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி, அ.சா.2 மற்றும் அ.சா.3 பார்வை மகஜர் சாட்சிகள், அ.சா.4 புலன் விசாரணை அதிகாரி.

5. **<u>அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்:</u>**

i) அ.சா.1 ராணி தனது சாட்சியத்தில் சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 09.00 மணியளவில் ஈஸ்வரி அம்மன் கோவில் அருகே தன் அக்கா வேலைக்கு போன இடத்தில் அவரை கூட்டிக்கொண்டு வந்து இடது காலை உடைத்து விட்டதாகவும், தன் அக்காவின் சத்தம் கேட்டு தான் சென்று பார்த்தபோது எதிரி அங்கிருந்து ஓடிவிட்டதாகவும், தன் அக்கா நடக்க முடியாமல் இருந்ததால் தான் அவரை இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றதாகவும், தன் அக்கா சிகிச்சையில் இருக்கும் போது இராமேஸ்வரம் காவல்நிலையத்தில் இருந்து போலீசார் வந்து விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

ii) அ.சா.2 சேதுமுனியாண்டி மற்றும் அ.சா.3 கிருஷ்ணன் ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில் இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது எனவும், போலீசார் கையொப்பம் செய்ய கூறியதால் கையொப்பம் செய்ததாகவும் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

iii) அ.சா.4 சசிக்குமார் தனது சாட்சியத்தில் தான் கடந்த 27.10.2020ம் தேதியன்று 14.00 மணியளவில் இராமேஸ்வரம் நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது மாங்காடு கிராமம், சுரேஷ் மனைவி சித்ரா வயது 35/2020 என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின்பேரில் நிலையக் குற்ற எண். 369/2020 சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) இதச மற்றும் 4 of TNPHW

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.22 16:34:31 +0530

Act 2002–ன் கீழ் வழக்கு பதிவு செய்து அன்றே கனம் நீதித்தை நடுவர் இரமேஸ்வரம் அவர்களுக்கு அனுப்பி வைத்ததாகவும், புகார் மனு அ.சா.ஆ.1 எனவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 எனவும், அன்றைய தினமே வழக்கு கோப்பை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 15.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சேது முனியாண்டி மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்துள்ளதாகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.3 எனவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 எனவும், பின்னர் சம்பவ சாட்சிகளான ராணி, ராமதாஸ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு எதிரியை தேடி வந்த நிலையில் 02.11.2020ம் தேதி 18.00 மணிக்கு காவல் நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்து காவல் நிலையப் பிணையில் விடுவித்ததாகவும், பின்னர் வழக்கில் காயம்பட்ட சாட்சிகளான சித்ரா என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு.இஸ்மாயில் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் வழங்கிய விபத்து பதிவேட்டு அசலுடன் கூடிய காயச்சான்றினை பெற்றதாகவும், விபத்து பதிவேட்டு அசல் அ.சா.ஆ.5 மற்றும் காயச்சான்று அ.சா.ஆ.6 எனவும், இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள்.294(b), 323, 324, 506(ii) இதச மற்றும் 4 of TNPHW Act 2002–ன் கீழ் 21.02.2021ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

**Questioning U/s.313(i)(b) Cr.P.C**

6. அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணை முடிவுற்றவுடன் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவரான எதிரிக்கு பாதகமாக உள்ளவை குறித்து 313(1)(ஆ) Cr.P.C–ன் கீழ் விளக்கி வினவியபோது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் அனைத்தும் பொய் என்று கூறினார். தனது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறினார். குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் இந்த வழக்கில் எந்தவொரு சாட்சியும் விசாரிக்கவில்லை.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.22 16:34:37 +0530

**Point for determination**

**7. இந்நிலையில், குற்றம் சாட்டப்பட்டவரான எதிரி மீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) இதச மற்றும் 4 of TNPHW Act படியான குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே இந்த வழக்கில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.**

**இருதரப்பு வாதங்கள்**

8. இவ்வழக்கில் கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை–1 தனது வாதத்தில், சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 மற்றும் அ.சா.4 புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியத்தின் மூலம் அரசு தரப்பு வழக்கு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எனவே, எதிரிக்கு தக்க தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

9. குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 ராணி என்பவர் சம்பவத்தை கேள்வியுற்ற சாட்சி என்றும், அ.சா.2, அ.சா.3 ஆகியோர் பிறழ் சாட்சியம் அளித்துள்ள நிலையில், அ.சா.4–ன் சாட்சியம் மூலமாக மட்டும் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க இயலாது என்று வாதிட்டார். மேலும், இவ்வழக்கில் சம்பவ இடமானது அ.சா.1–ன் வீட்டின் முன்பு என்று அரசுத்தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று வாதிட்டார். மேற்சொன்ன காரணங்களின் அடிப்படையில் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்க வேண்டுமென வாதிட்டார்.

**Appreciation of Evidence**

11. இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் வழக்கு பட்டியல் சாட்சி 1 சித்ரா என்பவர் முகவரியில் இல்லையென்று கிராம நிர்வாக அலுவலர் சான்று பெறப்பட்டு தாக்கல்

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.22 16:34:44 +0530

செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட சாட்சி விசாரிக்கப்படாத நிலையில் இவ்வழக்கில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக முன்னிடப்பட்ட வழக்கு பட்டியல் சாட்சி 3 ராமதாஸ் என்பவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விசாரிக்கப்படவில்லை. மேலும், இவ்வழக்கில் மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக முன்னிடப்பட்டு விசாரிக்கப்பட்ட அ.சா.1 ராணி என்பவரின் சாட்சியத்தின் மூலமாகவே இவ்வழக்கின் எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதா என்றும், அரசுத்தரப்பில் முன்னிடப்படும் வழக்கு சம்பவம் நடைபெற்றதா என்றும் தீர்மானிக்க இயலும்.

12. அ.சா.1 ராணி தனது முதல்விசாரணையில் புகார்தாரர் தனது உடன்பிறந்த சகோதரி என்றும், கேரளாவில் வசித்து வருவதாகவும் சாட்சியமளித்துள்ளார். எதிரி ஈஸ்வரி அம்மன் கோவில் அருகே வைத்து புகார்தாரரின் காலை உடைத்துவிட்டதாகவும், புகார்தாரர் சத்தம் கேட்டு தான் சென்று பார்த்ததாக சாட்சியம் அளித்துள்ளார். இருப்பினும், எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சம்பவம் நடந்த போது அ.சா.1 தனது வீட்டில் இருந்ததாகவும், சம்பவம் நடந்து முடிந்த பின்பு தான் சம்பவயிடம் சென்றதாகவும் சாட்சியமளித்துள்ளார். மேலும், சம்பவம் எப்படி நடந்தது என்று தனக்கு தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார். சம்பவம் தனது வீட்டில் நடக்கவில்லையென்றும், ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் தள்ளியுள்ள ஈஸ்வரி அம்மன் கோவில் முன்பு தான் சம்பவம் நடந்தது என்று சாட்சியமளித்துள்ளார். மேற்சொன்னவற்றின் மூலமாக அ.சா.1 ராணி சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியல்ல என்றும், சம்பவம் நடந்த பின்பு புகார்தாரரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளார் என்பது தெரிய வருகிறது. அ.சா.1 எதிரி தகாத வார்த்தைகளால் பேசி கொலைமிரட்டல் விடுத்ததாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே, அவரது சாட்சியம் மூலமாக எதிரி குற்றச் சம்பவத்தில் ஈடுபட்டு புகார்தாரரின் காலில் சிறுகாயத்தை உண்டாக்கியதாகவும், தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், கொலைமிரட்டல் விடுத்ததாகவும் இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்க இயலவில்லை.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.22 16:34:51 +0530

13. இவ்வழக்கின் சம்பவயிடம் குறித்து விசாரிக்கப்பட்ட அ.சா.2 சேது முனியாண்டி மற்றும் அ.சா.3 கிருஷ்ணன் ஆகியோர் பிறழ்சாட்சியமளித்து காவல்நிலையத்தில் வைத்து பார்வை மகஜரில் கையொப்பம் செய்ததாக சாட்சியமளித்துள்ளார்கள். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.4 சசிக்குமார் என்பவர் அ.சா.ஆ.3 பார்வை மகஜரில் சம்பவயிடமானது மாங்காட்டில் உள்ள அ.சா.1 ராணியின் வீட்டின் முன்பாக அமையப் பெற்றுள்ளதாக ஆவணங்களில் குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார். ஆனால், அதற்கு முற்றிலும் முரண்பட்டு அ.சா.1 சுமார் 1 கி.மீ தூரம் தள்ளியுள்ள ஈஸ்வரி அம்மன் கோவில் முன்பாக சம்பவம் நடைபெற்றதாக சாட்சியமளித்துள்ளார். மேற்சொன்ன முரண்பாடுகள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில் சம்பவம் நடைபெற்ற இடம் அ.சா.1–ன் வீட்டின் முன்பு என்றும், அங்கு அ.சா.4 சசிக்குமார் விசாரணை செய்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்ததாக இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்க இயலவில்லை.

14. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.4 சசிக்குமார் என்பவர் சம்பவத்திற்கு பிறகு தன்னால் மேற்கொள்ளப்பட்ட புலன்விசாரணை தொடர்பாக சாட்சியமளித்துள்ளார். எனினும் அவரது சாட்சியம் மூலமாக எதிரி மீதான குற்றச்சாட்டு தொடர்பாக இந்நீதிமன்றத்தால் சந்தேகத்திற்கிடமின்றி தீர்மானிக்க இயலாது.

15. எனவே, கடந்த 27.10.2020ம் தேதியன்று காலை 08.15 மணியளவில் அ.சா.1–ன் வீட்டின் முன்பாக பொது இடத்தில் நின்ற புகார்தாரர் சித்ராவை அவரது கணவரான எதிரி சுரேஷ் என்பவர் அசிங்கமாக பேசி, இரும்புக் கம்பியை எடுத்து சித்ராவின் வாயில் அடித்து சிறுகாயத்தை ஏற்படுத்தியும், சித்ராவின் வலது காலை கையால் திருகி முறுக்கி சிறு காயம் ஏற்படுத்தியும், பின்பு இரும்பு கம்பியைக் காட்டி கொலைமிரட்டல் விடுத்து குற்றம் புரிந்துள்ளதாக அதன் மூலம் குற்றம்சாட்டப்பட்டவர் பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) இதச மற்றும் 4 of TNPHW Act கீழான குற்றசாட்டை புரிந்ததாக

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.22 16:34:57 +0530

இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்க இயலாது. அரசுத்தரப்பில் குற்றம்சாட்டப்பட்டவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

16. முடிவாக எதிரி பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) இதச மற்றும் 4 of TNPHW Act இதச படி குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 248(1) Crpc ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

17. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

18. இவ்வழக்கில் எதிரி 02.11.2020 ம் தேதியன்று கைது செய்யப்பட்டு அன்றைய தினமே நிலையப் பிணையில் சென்றுள்ளார். குற்றம்சாட்டப்பட்டவர் எழுதிக் கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பு என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 22 ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.22 16:35:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

**<u>பின்னிணைப்பு :–</u>**

**(i) <u>அரசுத் தரப்பு சாட்சிகள்:</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.சா.1 | – | ராணி | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.2 | – | சேதுமுனியாண்டி | பார்வை மகஜர் சாட்சி |

| | | | |
|---|---|---|---|
| அ.சா.3 | – | கிருஷ்ணன் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.4 | – | சசிக்குமார் | புலன்விசாரணை அதிகாரி |

**(ii) அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 27.10.2020 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 27.10.2020 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 27.10.2020 | பார்வைமகஜர் |
| அ.சா.ஆ.4 | 27.10.2020 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 27.10.2020 | விபத்து பதிவேட்டு அசல் |
| அ.சா.ஆ.6 | 27.10.2020 | காயச்சான்று |

**(iii) அரசு தரப்பு சான்று பொருள் :** இல்லை

**(iv) எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் :**

இல்லை.

**குறிப்பு:**

1. எந்த ஒரு சாட்சியும் மூன்று முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கின் முடிவு குறித்து காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. வழக்கு விசாரணையின்போது எதிரி காவல் நிலையப் பிணையில் இருந்தார்.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.22 16:35:12 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.